திருமாலிருஞ்சோலைமலை

# அழகரந்தாதி.

மூலபாடம்.

அழகியமணவாளதாசர்

என்கின்ற - திவ்வியகவி

**பிள்ளைப்பெருமாள்ஐயங்கார்**

கலித்துறையினால் அருளிச்செய்தது.

இது

கையெழுத்துப் பிரதிகளில் - பாடந்தோறும் பிழைபடு
கின்றதை நோக்கி - அதை விலக்கும் பொருட்டு -
சென்னைமாநகரத்துப்பிரபுக்களினும் - புலவர்களினும் -
உபாத்தியாயர்களினும் - பலரும் கேட்டுக்கொண்டதால் -
சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவர்

திரு - வேங்கடாசலமுதலியாராலே

பலபிரதிகளைக்கொண்டுஆராய்ந்துபிழைகளைத்திருத்தினதை
இவர்சகோதரர் ஷை சங்கத்துத் தமிழ்ப்புலவர்

வீரராகவமுதலியாரால்

இரண்டாம்பதிப்பு அவரது சரஸ்வதி அச்சுக்கூடத்தில்
பதிக்கப்பட்டது.

இது இவரது முக்கிய இஷ்டர்

ஆயலூர். பொன்னரங்கமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகன சகாப்தம் - ௲௭௫௮ - குரோதி௵.
இதன்விலை - அணா ௫.

1836

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.




நன்றாக .... குருவாழ்க .... குருவே துணை.

திருமாலிருஞ்சோலைமலை

# அழகரந்தாதி.

தனியன்.

திருகவிமங்கைமணவாளவள்ளல்செந்தேன் றளித்து *
முருகவிழ்தென் றிருமாலிருஞ்சோலைமலைமுகுந்தற் *
கிருகவின்றாள்களிற்சூடுமந்தாதியினீரைம்பதில் *
ஒருகவிகற்கினுஞானமும்வீடுமுதவிடுமே. (௧)

காப்பு.

அங்கத்தமிழ்மறையாயிரம்பாடியளித்துலகோர் *
தங்கட்குவீடருளும்புருடோத்தமன்றண்வகுளத் *
தொங்கற்பராங்குசன்றாளிணைமாலிருஞ்சோலைமலைச் *
சங்கத்தழகரந்தாதிநடாத்தத்தலைக்கொள்வனே. (௨)

நூல்.

நீராழிவண்ணனைப்பாலாழிநாதனைநின்மலனைச் *
சீராழியங்கைத்திருமகள்கேள்வனைத்தெய்வப்புள்ளூர் *
கூராழிமாயனைமாலலங்காரனைக்கொற்றவெய்யோன் *
ஓராழித்தேர்மறைத்தானையெஞ்ஞான்றுமுரைநெஞ்சமே. (௧)

உரைமாற்றமுண்டென்பொறியைந்துமுன்னிடத்தன்றியுண்ணும்
இரைமாற்றவேண்டுமிதுவேயென்விண்ணப்பமென்னப்பனே *
உரைமாற்றளவற்றபொன்னுடுத்தாய்வில்லெடுத்திலங்கை *
வரைமாற்றலரைச்செற்றாயழகாகருமாணிக்கமே. (௨)

மாணிக்கனகம்புரைமேனிமாலுக்குவார்சடையோன் *
பாணிக்கனகம்பலியொழித்தானுக்குப்பச்சைத்துழாய் *
ஆணிக்கனகமுடியலங்காரனுக்கண்டமெல்லாம் *
பேணிக்கனகனுக்குப்பித்தானவர்பித்தரன்றே. (௩)

பித்தரும்பாநின்றநெஞ்சனைவஞ்சனைப்பேருலகோர்
கைத்தரும்பாவியெனுங்கடையேனைக்கடைக்கணியாய்
முத்தரும்பாருந்தொழுமழகாவண்டுமூசுந்துழாய்
புத்தரும்பார்முடியாயடியாரைப்புரப்பவனே. —————— (௪)

புரந்தரனுமெனப்பூபதியாகிப்புகர்முகமா
துரந்தரசாளிலென்னல்குரவாகிலென்றேல்புவிக்கு
வரந்தரமாலிருஞ்சோலைநின்றார்க்கென்மனத்தினுள்ளே
நிரந்தரமாயலங்காரர்க்கிங்காட்பட்டுநின்றபின்னே. —————— (௫)

நின்றபிராணன்கழலுமுன்னேநெஞ்சமேநினையாய்
சென்றபிராயம்வம்பேசென்றதாற்றிருமங்கைகொங்கை
துன்றபிராமனைச்சுந்தரத்தோளனைத்தோளின்மல்லைக்
கொன்றபிரானையடைந்தடியாரொடுங்கூடுகைக்கே. —————— (௬)

கூடுகைக்குஞ்சரமத்தடியேற்குக்கொடியவஞ்சம்
சாடுகைக்குஞ்சரணந்தரவேண்டுந்தடத்தழுந்தி
வாடுகைக்குஞ்சரங்காத்தீர்விண்வாழ்கைக்கும்வாளரக்கர்
வீடுகைக்குஞ்சரங்கோத்தீர்விடைவெற்பின்வித்தகரே. —————— (௭)

வித்தகரும்பர்க்கரசானவனும்விதியுங்கங்கை
மத்தகரும்பரவும்மலங்காரர்மழைகொண்டகார்
ஒத்தகரும்பரஞ்சோதியர்நாமமுணாத்தன்னைமீர்
இத்தகரும்பரதெய்வமுங்கூத்தும்விட்டேத்துமினே. —————— (௮)

ஏத்துமின்பத்தியினாலெட்டெழுத்துமிணையடிக்கே
சாத்துமின்பத்திரத்தண்ணந்துழாய்மதிதாங்கிக்கஞ்சம்
பூத்துமின்பத்திசெயும்பச்சைமாமுகில்போலழகர்
காத்துமின்பத்திலிருத்தியும்வைப்பர்கருணைசெய்தே. —————— (௯)

செய்தவராகவருந்தியுந்தீர்த்தத்துறைபடிந்தும்
கைதவராகமங்கற்றுமென்னுங்கடற்பார்மருப்பிற்
பெய்தவராகனைமாலலங்காரனைப்பேரிலங்கை
எய்தவராகவவென்றேத்தநீங்குமிருவினையே. —————— (௰)

வினைக்குமருந்தரிக்கும்பிணிமூப்புக்கும்வீகின்றவே
தனைக்குமருந்தன்னதாளழகாசெய்யதாமரையங்
கனைக்குமருந்தமுதேயருளாய்நின்னைக்காதலித்து
நினைக்குமருந்ததிதன்னுயிர்வாழ்க்கைநிலைபெறவே. (௧௧)

நிலையாமையானவுடலுமுயிருநினைவுந்தம்மிற்
கலையாமயானங்கலக்குமுன்னேகங்கைவைத்தசடைத்
தலையாமையானனன்றுமறையான்றொழுந்தாளழகன்
அலையாமையானவன்மாலிருஞ்சோலையடைநெஞ்சமே. (௧௨)

நெஞ்சமுருக்குமுயிருருக்குந்தொல்லைநீள்வினையின்
வஞ்சமுருக்கும்பவமுருக்கும்வண்டுழாயழகர்
கஞ்சமுருக்குமலர்வாய்த்திருநண்பர்கஞ்சனுக்கு
நஞ்சமுருக்கும்வளையாழியன்னவர்நாமங்களே. (௧௩)

நாமங்களாவிநழுவுந்தனையுநவின்றவரைத்
தாமங்களாவிமனத்துள்வைப்பார்தண்டலையிலகில்
தூமங்களாவிமணநாறுமாலிருஞ்சோலையன்பர்
சேமங்களாவின்கனியனையார்பதஞ்சேருவரோ. (௧௪)

சோராதகாதநராசேழ்தலைமுறைசேர்ந்தவர்க்கும்
வாராதகாதம்வசைபிணிபாவமறிகடன்மூன்
றூராதகாதங்கடேர்த்தானைமாலிருஞ்சோலையிற்போய்
ஆராதகாதலுடன்பணிவீரென்னழகனையே. (௧௫)

அழக்கன்றியகருங்கண்ணிக்குக்கண்ணியளித்திலரேல்
வழக்கன்றிமுன்கொண்டவால்வளைகேளுமறுத்ததுண்டேல்
குழக்கன்றின்பின்குழலூதலங்காரர்க்குக்கோதைநல்லீர்
சழக்கன்றில்வாய்பிளந்தானுய்யலாமென்றுசாற்றுமினே. (௧௬)

சாற்றுக்கரும்பனைக்கூற்றென்னுமாசைத்தமிழ்மலயக்
காற்றுக்கரும்பனையுங்கண்படாளலங்காரற்கண்டர்
ஏற்றுக்கரும்பனையக்கொங்கையாள்கொண்டவின்னலுக்கு
மாற்றுக்கரும்பனையல்லாதுவேறுமருந்தில்லையே. (௧௭)

மருந்துவந்தார்தொழுமாலிருஞ்சோலைமலையழகர்
அருந்துவந்தாரணியென்றயின்றாடலாயிரவாய்ப்
பொருந்துவந்தார்பணிப்பாயார்விதூரன்புதுமனையில்
விருந்துவந்தாரடியார்க்கில்லைநோயும்வெறுமையுமே. (௧௮)

வெறுத்தவனாக்கஞ்சனைச்செற்றுளார்விடைவெதீபர்வெங்கண்
கறுத்தவனாக்கஞ்சவெலன்றுவந்தார்கனகாம்பரத்தைப்
பொறுத்தவனாக்கஞ்சனமேனிக்காவிபுலர்ந்துருகிச்
சிறுத்தவனாக்கஞ்சங்கூப்புமென்பேதைக்கென்செப்புவதே (௧௯

செப்போதனஞ்செழுந்துப்போசெவ்வாயென்றசேயிழையார்க்
கொப்போதனஞ்சுருகித்திரிவீர்கணனூரைதிடமண்விண்
அப்போதனமென்றமுதுசெய்தாரலங்காரர்பொற்றாள்
எப்போதனந்தறவிர்ந்தேத்தநீங்களிருக்கின்றதே. (௨௰)

இருக்கந்தரத்தனைவோர்களுமோதியிடபகிரி
நெருக்கந்தரத்தனையேத்தநின்றானைநிறத்ததுப்பின்
உருக்கந்தரத்தனைத்துன்பொழித்தானையுலகமுண்ட
திருக்கந்தரத்தனையல்லாதெண்ணேனொருதெய்வத்தையே. (௨௧)

தெய்வம்பலவவர்நூலும்பலவவைதேர்பொழுதில்
பொய்வம்பலவென்றுதோன்றும்புல்லோர்கட்குப்போதநல் }
உய்வம்பலனுமவனேயென்றோதியுணர்வர்நெஞ்சே [லோர் }
கொய்வம்பலர்சொரியுஞ்சோலைமாமலைக்கொண்டலையே. (௨௨)

கொண்டலையாதிற்குமைம்புலக்கோண்மகரங்களினீர்ப்
புண்டலையார்பிறவிக்கடன்மூழ்குவருத்தமனே ^
தண்டலையார்திருமாலிருஞ்சோலைத்தனிச்சுடரை ^
புண்டலையால்வணங்காரணங்கார்வினைபோகவென்றே. (௨௩)

ஞான்றுதரங்கலந்தேனற்றைநான்றுதொட்டிற்றைவரை
நின்றுதரங்கிக்கின்றேற்கருள்வாய்நெடுங்கான்கடந்து
சென்றுதரங்கக்கடறார்த்திலங்கையிற்றீயவனைக்
கொன்றுதரங்குவித்தாய்சோலைமாமலைக்கோவலனே. (௨௪)

கோவலன்பார்ப்புடன்கேகயஞ்சூழ்குளிர்சோலைமலைக்
காவலன்பாற்கடற்கண்டுயின்மாலலங்காரனென்றே
பாவலன்பாற்பணிவாரணிவானவராகிமறை
நாவலன்பார்ப்பதிநாதனண்ணுப்பதநண்ணுவரே. (௨௫)

நண்ணினனாகமுடிமேனடித்தென்னைநாசமறப்
பண்ணினனாசமும்பாருமளந்தனபண்டுதம்பி
மண்ணினனாகவனம்போயினவளர்சோலைமலைக்
கண்ணினனாகங்கரியான்செவந்தகழலிணையே. (௨௬)

கழலப்புகுந்தவலையறியாரென்கருத்தறியார்
அழலப்புகன்றுறுப்பாரன்னைமாரறுகாற்சுரும்பு
சுழலப்புனைந்ததுழாய்மார்பர்மாலிருஞ்சோலையென்னா
தழலப்புவரென்றனங்களிலேசந்தனங்களென்றே. (௨௭)

தனத்துக்கராவியவேல்விழிக்கேக்கற்றுத்தையலரால்
தினத்துக்கராகித்திரிவார்பலர்சிலர்செங்கமல
வனத்துக்கராசலங்காத்தாற்குச்சோலைமலையினின்ற
கனத்துக்கராவணையாற்கெம்பிராற்குள்ளங்காதலரே. (௨௮)

காதலைப்பத்தினிமேல்வைத்தநீசக்கருநிருதன்
மாதலைப்பத்தியைமண்ணிலிட்டாய்நின்னைவாழ்த்தித்தொண்டர்க்
கீதலைப்பத்தியைச்செய்வோர்கள்வாழுமிடபவெற்பா
தீதலைப்பத்தியங்கித்திரிவேற்கருள்செய்தருளே. (௨௯)

அருடருமங்கைவிடாதேத்துமன்பருக்கன்பரெல்லில்
இருடருமங்கையெறியாழியாரிசைக்கின்னரரும்
கெருடருமங்கையரும்வாழிடபகிரியிற்கல்லா
முருடருமங்கையலெய்திலன்றேயவர்முத்தரன்றே. (௩௰)

முத்தரன்றேநின்கழலொருகாற்கைமுகிழ்க்கப்பெற்றோர்
பித்தரன்றேநினக்கேபித்தராகிற்பிரமன்கங்கை
வைத்தரன்றேய்துயர்தீர்த்தாய்நின்சோலைமலைமருவும்
பத்தரன்றேபரிவாலென்னையாளும்பரமர்களே. (௩௧)

பரந்தாமனைத்திருமாலிருஞ்சோலைப்பரமனைக்கால்
கரந்தாமனையன்னகார்நிறத்தானைக்கடல்கடக்கும்
சரந்தாமனைதிரிகான்போயிலங்கைத்தலைவன்பத்துச்
சிரந்தாமனைக்கணைத்தெய்தானையெய்தற்குத்தேர்மனமே. (௫௨)

தேராயிரவுபகலினைதேடுவைதீமைநன்மை
பாராயிரங்குவைபாவையாற்பண்டுமாவலிபால்
சோராயிரந்தவனைத்திருமாலிருஞ்சோலைநின்ற
பேராயிரமுடையானைநெஞ்சேயென்றுபேணுவையே. (௫௩)

பேணிக்கவித்தவனைக்குடையாய்பெரியோர்பதின்மர்
ஆணிக்கவித்தமிழ்மாலைகொண்டாயழகாகரிய
மாணிக்கவித்தகமாமலையேவண்டுளவுக்கல்லால்
பாணிக்கவித்தடங்காதுவெங்காமப்படர்கனலே. (௫௪)

படராகுவால்குவியக்குழலூதியபாலனையம்
அடராகுவாகனன்றுதைக்கிட்டாரலங்காரர்துழாய்க்
கிடராகுவார்பலர்காண்டமியேனையெரிப்பதென்னீ
விடராகுவாய்க்கொண்டுடல்சுட்டுக்கான்றிட்டவெண்டிங்களே. (௫௫)

திங்களப்பாநின்றசெந்தீக்கொழுந்தீசெழுஞ்சங்குபோ
லுங்களப்பாவையுருகவதோர்கிலரும்பரொவலாம்
எங்களப்பாவெமைக்காவாயெனவுலகீரடியால்
அங்களப்பான்வளர்ந்தார்சோலைமாமலையாதிபரோ. (௫௬)

ஆதியராவிற்றுயிலலங்காரரழகரன்பாம்
வேதியராவுதிவீற்றிருப்பாரண்டமீதிருக்கும்
சோதியராவின்பின்போந்தானையன்றித்தொழேனுடலைக்
காதியராவினும்பொன்மாமகுடங்கவிக்கினுமே. (௫௭)

கவித்தானைமன்னற்குநட்பாய்முடிகவித்தானையன்று
புவித்தானைவற்றப்பொழிசரத்தானைப்பொருதிலங்கை
அவித்தானைமாலிருஞ்சோலைநின்றானையழகனைமுன்
தவித்தானைவாவெனவந்தானைப்பற்றினென்றஞ்சமென்றே. (௫௮)

தஞ்சந்தனமென்றுதேடிப்புல்லோர்தையலார்கடைக்கண்
வஞ்சந்தனங்கொள்ளவாளாவிழப்பர்மதியுடையோர்
செஞ்சந்தனப்பொழின்மாலிருஞ்சோலைத்திருநெடுமால்
நெஞ்சந்தனக்குவப்பாகநல்காநிற்பர்நேர்படினே. (௩௯)

நேராயவேதனைநெஞ்சிடந்தாய்நெடுஞ்சோலைமலைக்
காராயவேதனைமுன்படைத்தாய்நின்கழற்குத்தொண்டென்
றோராயவேதனைப்புன்பிறப்போயுமவாவழியிற்
பேராயவேதனையில்லுழைப்போரும்பிழைப்பர்களே. (௪௰)

பிழைத்தலையானெண்ணிப்பேசுகின்றேனிப்பிணிமற்றொன்றால்
மழைத்தலைவார்குழலீர்தணியாதுவருணனைமுன்
அழைத்தலையங்கடைத்தாரலங்காரரலங்கனல்கீர்
முழைத்தலைநின்றுமலையானிலம்வந்துமோதுமுன்னே. (௪௧)

மோதாகவந்தனைமூட்டிலங்கேசன்முடிந்துவிண்ணின்
மீதாகவந்தனைவில்லெடுத்தேவிடைவெற்பினின்ற
நாதாகவந்தனைச்செற்றாயுனையன்றிநான்மறந்தும்
தீதாகவந்தனைசெய்யேன்புறஞ்சிலதேவரையே. (௪௨)

தேவரையாதன்மனிதரையாதல்செழுங்கவிதை
நாவரையாமனவிலுகிற்பீர்நம்மையாளுஞ்செம்பொன்
மேவரையானையிருஞ்சோலைவேங்கடமெய்யமென்னும்
மாவரையானையொருவனையேசொல்லிவாழுமினே. (௪௩)

வாழுமின்பங்கயச்சுந்தரவல்லிமணாளன்வெற்பைச்
சூழுமின்பந்தித்ததொல்வினைதீர்ந்துய்யத்தொங்கல்சுற்றும்
தாழுமின்பஞ்சணைமேன்மடவார்தடமாமுலைக்கே
வீழுமின்பங்கருதித்துன்பயோனியில்வீழ்பவரோ. (௪௪)

வீழமராமரமெய்தார்மதிதவழ்வெற்பைநெஞ்சே
தாழமராடச்சமன்குறுநாளிச்சரீரமென்னும்
பாழமராமற்பரகதியேற்றவர்பார்க்கில்விண்ணோர்
வாழமராவதியுந்நரகாமந்தமாநகர்க்கே. (௪௫)

நகரமூன்றடும்புரந்தவர்நண்ணலரால்வனமும்
சிகரமூன்றடுஞ்சிறுமைகண்டோமன்றைருதேனிசைகள்
பகரமூன்றடும்பனிச்சோலைவெற்பினிற்பார்க்குக்கஞ்சன்
தகரமூன்றடுகைத்தார்க்கறிந்தீர்கள்சரண்புகுமே. (௪௬)

சரணியனாகத்தனைநினைந்தாலாத்தன்போலவைக்கும்
அரணியனாகத்தணையானரங்கனழகனெங்கோன்
இரணியனாகமிடந்தான்கதையன்றியினர்தங்கள்
முரணியனாகத்தும்புன்குரலோரிமுதுக்குரலே. (௪௭)

முதுவிருந்தாவனத்தானிரைமேய்த்தவர்முன்விதுரன்
புதுவிருந்தானவர்மாலலங்காரர்பொலங்கழலாம்
மதுவிருந்தாமரைக்காளாயிரார்க்குமதிநுட்பநூல்
எதுவிருந்தாலுமதனால்விடாவிங்கிருவினையே. (௪௮)

வினையாட்டியேன்கொண்டவெங்காமநோய்வெறியாட்டினுமிச்
சினையாட்டினுந்தணியாதன்னைமீர்செய்யபூங்கமல
மனையாட்டிநாயகன்மாலிருஞ்சோலைமலைச்சிலம்பாற்
றனையாட்டிவாருஞ்சொன்னேனெந்தநோயுமெனக்கில்லையே.

எனக்காவியங்குமுடலிங்குமாகியிருப்பதைச்சந்
தனக்காவியங்குந்தமரவண்டீர்சொல்லுந்தத்துவநூல்
கனக்காவியங்கவிவல்லோர்புகழலங்காரனுக்கு
வனக்காவியங்கண்ணிமாமலராண்மணவாளனுக்கே. (௫௰)

மணவாளராவிநிகர்திருமாதுக்குமாலழகர்
பணவாளராவிற்கண்பள்ளிகொள்வார்திருப்பாதமெண்ணக்
குணவாளராவிரின்றேயுயிர்காளும்மைக்கூற்றுவனார்
திணவாளராவியறுக்குமப்போதுநினைப்பரிதே. (௫௧)

நினைப்பரியாயெளியாயும்பர்யார்க்குநின்னன்பருக்கும்
வினைப்பரியானவன்வாய்பிளந்தாய்வியன்சோலைமலை
தனைப்பரியாநின்றதாளழகாமுற்சனனத்துள்ளும்
உனைப்பரியாமலன்றேபரித்தேனிவ்வுடலத்தையே. (௫௨)

உடலம்புயங்கத்துரிபோல்விடுமன்றுவணப்புள்ளின்
அடலம்புயமிசைநீவரவேண்டுமையானைற்கும்
மடலம்புயற்கும்வரந்தருஞ்சோலைமலைக்கரசே
கடலம்புயர்வளையாலடைத்தாயென்னைக்காப்பதற்கே. (௫௩)

காப்பவனத்தமலரோனையுங்கறைக்கண்டனையும்
பூப்பவனந்தரம்போக்கவைப்பான்புனல்பார்விசும்பு
தீப்பவனந்தருந்தெய்வசிகாமணிச்சேவடியை
நாப்பவனந்தப்புகழ்வார்க்கொப்பில்லைநவகண்டத்தே. (௫௪)

கண்டாகனன்கண்ணனல்லாற்கதியின்மைகண்டடைந்த
துண்டாகனம்பவொட்டாதுங்களூழ்வினையுண்மையறிந்
தண்டாகனவண்ணனையருளாயென்றழகனுக்கே
தொண்டாகனன்னெஞ்சினுளாப்பீர்பிறர்தொண்டர்களே (௫௫)

தொண்டுபடார்திருமாலிருஞ்சோலையிற்சோதிக்கன்பு
கொண்டுபடாமலரிட்டிறைஞ்சார்மடக்கோதையரைக்
கண்டுபடாமுலைதோயனுராகங்கருதியிரா
உண்டுபடாநிற்கும்போதுநைவாரெங்ஙனுய்வதுவே. (௫௬)

உய்வர்தொழும்புசெய்தென்றிருப்போதையுய்யாமலைவர்
பெய்வந்தொழுவினைக்கேயென்பராற்பெருந்தேன்சிகரம்
தைவந்தொழுகுமலையலங்காரசதுமுகத்துத்
தெய்வந்தொழுந்தெய்வமேயென்கொலோவுன்றிருவுளமே. (௫௭

திருவிளையாடுதிண்டோட்செங்கண்மால்பலதேவருடன்
மருவிளையான்றிருமாலிருஞ்சோலைமலையெனவோர்
உருவிளையாமற்பிறப்பார்பலர்புகழோதிச்சிலர்
கருவிளையாநிற்கவித்தவர்முத்தியிற்காமமற்றே. (௫௮)

காமத்தனைப்பொய்யழுக்காறுகோபங்களவுகொலை
யாமத்தனையுமுடையேனையாளுங்கொலான்பொருப்பாம்
தாமத்தனைவரும்போற்றநின்றுன்பண்டுதாமரையோன்
பூமத்தனைச்செய்தநோய்துடைத்தானடிப்போதுகளே. (௫௯)

போதகத்தானும்வெண்போதகத்தானும்புரார்த்தகனும்
ஓதகத்தானதிர்தருங்காலைத்திருவளைசேர்
பூதகத்தாயழகாவருளாயென்பர்பின்னையென்ன
பாதகத்தான்மறந்தோதனிநாயகம்பாவிப்பரோ. (௬௰)

பாவிக்கமலவிரிஞ்சற்கிறையவர்பத்தர்தங்கள்
ஆவிக்கமலத்துவீற்றிருப்பாரளிப்பாடல்கொண்ட
வாவிக்கமலமணநாறுஞ்சோலைமலையைக்கண்ணால்
சேவிக்கமலமறுமனமேயெழுசெல்லுதற்கே. (௬௧)

செல்லுக்குவளைகுழனாட்டமென்றுதெரிவையர்பால்
பல்லுக்குவமைமுதுகாந்தனையும்புன்பாட்டுரைப்பீர்
அல்லுக்குவளையுழும்பாண்டிநாட்டையடைந்துநுங்கள்
சொல்லுக்குவளையுண்டார்க்கலங்காரர்க்குச்சூட்டுமினே. (௬௨)

சூட்டோதிமஞ்சென்றுசொல்லாதெங்காதலைத்தும்பியிசைப்
பாட்டோதிமங்கையரும்பணியார்பண்டுகன்மழைக்காக்
கோட்டோதிமமெடுத்தார்சோலைமாமலைக்கோவலனூர்
மாட்டோதிமஞ்சினங்காணுரைப்பீர்மறுவாசகமே. (௬௩)

வாசம்பரந்ததுழாயுமென்பாடலுமாலையொளி
வீசம்பரபுபசும்பொன்னுமென்வேட்கையும்வீற்றிருக்கும்
தேசம்பரமபதமுமென்சிந்தையுந்தீவளியா
காசம்பரவைமண்கண்டுண்டமாலலங்காரனுக்கே. (௬௪)

அலங்காரன்சுந்தரத்தோளானழகனணிமுடியில்
இலங்காரனேறுதிருவுடையானெட்டெழுத்துங்கற்றோர்
கலங்காரனங்கன்கணையாவெச்செல்வமுங்காதலியார்
மலங்காரருந்துயர்மேவினுமாகுவர்வானவரே. (௬௫)

வானவதாரணிசுந்தரத்தோளன்முன்மாவலியைத்
தானவதாரணிதாவென்றமாயன்றராதலத்து
மீனவதாரமுதலானவைவினையின்றியிச்சை
யானவதாரிவரரவரோமுத்தாமவரே. (௬௬)

ஆமவணைப்பணித்தாள்வாரழகரயனுமையாள்
வாமவணைப்பணியான்பணிபாதத்தைவாழ்த்துங்கொங்கை
ஏமவணைப்பணிபூணுள்சந்தேதந்திழையாருணைத்தால்
வேமவணைப்பணியாதேயெனுமெங்கண்மெல்லியலே. (சுஎ)

மெல்லியலைப்பரியங்கனையாரும்வெறுத்துவசை
சொல்லியலைப்பரியங்கவொட்டார்சுடர்மாமலையைப்
புல்லியலைப்பரியங்கத்திலேறும்புயல்பதின்மர்
நல்லியலைப்பரியங்கழற்றுமறயந்தபின்னே. (சுஅ)

பின்னிறப்பும்பிறப்புந்நரைமூப்பும்பிணியுமனை
முன்னிறப்பும்பிரித்தானிருந்தானவர்மூதிலங்கை
மன்னிறப்புங்கக்கணைதொட்டசோலைமலையழகன்
பொன்னிறப்புண்டரிகத்திருத்தாளன்றிப்போற்றிலமே. (சுகூ)

போத்தியிராமவென்றூர்சோலைமாமலைபோதவிடார்
மாத்தியிராவைப்பகலாக்கிலார்வண்டுழாய்குழன்மேல்
ஏத்தியிராசதமாகவையாரொன்னிடணையெல்லாம்
மாத்தியிராரன்னைமாரொன்னைவாய்வம்பளக்கின்றதே. (எ௰)

அளப்பதுமங்கையினீரோற்பதுந்தந்தளிப்பதும்பின்
பிளப்பதுமங்கையில்வெண்கோட்டிற்கொள்வதும்பேருணவாக்
கிளப்பதுமங்கையெனத்தோள்புணர்வதுங்கேட்கில்வையம்
வளப்பதுமங்கையஞ்சேர்சோலைமாமலைமாதவரோ. (எக)

மாதவராலும்பாலறியார்மதுரைப்பிறந்த
யாதவராலிலைமேற்றுயின்றாரிருந்தாழ்சுனையில்
போதவராலுகண்மாலிருஞ்சோலையிற்போம்பிறவித்
தீதவராலன்றியெத்தேவராலுந்தெறலரிதே. (எஉ)

அரியவரந்தந்தயன்முதலோர்க்கருள்செய்தவனைப்
பெரியவரந்தமில்வாழ்வினராக்கித்தம்பேரருளால்
கரியவரந்தணர்கைதொழுமாலலங்காரர்வையத்
துரியவரந்தரங்கத்துயர்தீர்க்கவுலாவுவரோ. (எ௩)

உலகுதிக்கும்படிசிந்தித்துத்தந்திவ்வுலகினுறும்
நலகுதிக்கும்படிநின்றபிரானிடநானிலமும்
இலகுதிக்கும்விசும்புந்தொழவோங்கியிருள்வருடை
பலகுதிக்குந்தொறுந்தேன்பாயுஞ்சோலைப்பருப்பதமே. (௭௪)

பருப்பதந்தாமன்னிநிற்பதுபாற்கடல்பள்ளிகொள்வ
திருப்பதந்தாமம்பண்டிப்போதெலாமிளஞாயிறன்ன
உருப்பதந்தாமதர்க்கியாமலன்பர்க்குதவழகர்
திருப்பதந்தாமரைபோல்வாருகப்பதென்சிந்தனையே. (௭௫)

சிந்திக்கலாரங்கொழிக்குந்திருச்சிலம்பாற்றழகும்
பந்திக்கலாபமயிலாடுஞ்சாரலும்பங்கயனோ
டந்திக்கலாமதியாற்கரியாருறையாண்பொருப்பும்
வந்திக்கலாமெனிற்சந்திக்கலாமுயர்வைகுந்தமே. (௭௬)

வைதாரையுமுன்மலைந்தாரையுமலர்த்தாளில்வைத்தாய்
மொய்தாரையத்தனைத்தீங்கிழைத்தேனையுமூதுலகில்
பெய்தாரைவானிற்புரப்பானிடபப்பெருங்கிரியாய்
கொய்தாரைவேய்ந்ததிருவடிக்கீழ்த்தொண்டுகொண்டருளே (௭௭

கொண்டமருந்துங்கடைவாய்வழியுகக்கோழைவந்து
கண்டமருந்துயராம்போதுன்பாதங்கருதறியேன்
வண்டமருந்துளவோனேதென்சோலைமலைக்கரசே
அண்டமருந்தும்பிரானேயின்றேயுன்னடைக்கலமே. (௭௮)

அடைக்கலந்தானையிரந்தாள்புகலவவள்பொருட்டால்
படைக்கலந்தானைத்தருமன்கெடாமல்வெம்பாரதப்போ
ரிடைக்கலந்தானையலங்காரனைச்சரணென்றடைந்தேன்
முடைக்கலந்தானையுமப்போதயர்ப்பினுமுத்தியுண்டே. (௭௯)

உண்டிறக்கும்புவனங்களைமீளவுமிழ்ந்திலையேல்
பண்டிறக்கும்பதுமத்தோன்புரந்தரன்பைந்தழல்போல்
கண்டிறக்குஞ்சங்கரன்முதலோர்களைக்கண்டவரார்
திண்டிறக்குஞ்சரஞ்சேர்சோலைமாமலைச்சீதரனே. (௮௰)

சீரரிதாழ்பொழின்மாலிருஞ்சோலையிற்செல்வர்செங்கண்
போரரிதாள்புனைதாரரிதாகிற்றண்பூந்துளவின்
தாரரிதாவுந்தழையரிதாகிற்றழைதொடுத்த
தாரரிதாகிற்பிழைப்பரிதாமெங்கணன்னுதற்கே. (௮௧)

நன்னுதலைப்பணிபூண்மார்பில்வைத்துவிண்ணாட்டிருப்பார்
மின்னுதலைப்பணிமேற்றுயில்வார்விடைவெற்பினிற்பார்
மன்னுதலைப்பணியன்பரைவைக்குமலரடிக்கீழ்த்
துன்னுதலைப்பணிசெய்வதெஞ்ஞான்றென்றுயர்தொலைந்தே.

தொலைந்தானையோதுந்தொலையானையன்னைசொல்லான்மகுடம்
கலைந்தானைஞானக்கலையானையாய்ச்சிகலைத்தொட்டிலோ
டலைந்தானைப்பாலினலையானைவாணன்கையற்றுவிழ
மலைந்தானைச்சோலைமலையானைவாழ்த்தென்படநெஞ்சமே. (௮௩)

நெஞ்சிலம்பாற்றமுடியாதுவேளெய்துநீளிரவும்
துஞ்சிலம்பாற்றுளியுநஞ்சமாஞ்சொரிகன்மழையை
அஞ்சிலம்பாற்றடுத்தாரலங்காரரடிவிளக்கும்
செஞ்சிலம்பாற்றருகேகிடத்தீருயிர்தேற்றுதற்கே. (௮௪)

தேற்றுவித்தாற்புனறேற்றுநர்போற்றிருவெட்டெழுத்தால்
மாற்றுவித்தானென்மயக்கமெல்லாமண்ணும்விண்ணுமுய்யப்
போற்றுவித்தாரப்புயலலங்காரன்பொன்மேருவைப்போல்
தோற்றுவித்தாரணியுஞ்சுந்தரத்திருத்தோளண்ணலே. (௮௫)

அண்ணலைவான்மதிதோய்சோலைமாமலையச்சுதனைத்
தண்ணலைவானவனைத்தெய்வநாதனைத்தாளடைவான்
எண்ணலைவான்பகையாமைவரோடிசைந்தின்னமுடற்
புண்ணலைவாயெண்ணிநுய்மனமேயுன்புலமைநன்றே. (௮௬)

புலமையிலேநிமிர்ந்ததிபணைப்போற்றிப்பொதுமகளைக்
குலமையிலேகுயிலேகொடியேயென்றுங்கூர்விழியாம்
பலமையிலேயென்றும்பாடாமற்பாடுமின்பாவலர்காள்
நலமையிலேய்முத்தமார்சோலைமாமலைநம்பனையே. (௮௭)

நம்பிநின்றேனுன்சரணாவிந்தத்தைநன்னெஞ்சென்னும்
செம்பிநின்றேபொறித்தேனுனக்காளென்றுதெய்வக்குழாம்
பம்பிநின்றேசெறிக்கும்பதங்காணப்பதறுகின்றேன்
கொம்பிநின்றேன்சொரியுஞ்சோலைமாமலைக்கொற்றவனே. (௮௮

கொற்றவிராவணன்பொன்முடிவீழக்கொடுங்கண்டுஞ்சல்
உற்றவிராவணன்மாளவெய்தோனெண்பரதனுக்குச்
சொற்றவிராவணன்மாவிருஞ்சோலைதொழுதுவினை
முற்றவிராவண்ணற்றமிழ்மாலைமொழிந்தனனே. (௮௯)

மொழித்தத்தைகொஞ்சுமலையலங்காரன்முன்னூற்றுவரை
அழித்தத்தைமைந்தர்க்கரசளித்தோனடிநாட்டொடர்ந்தென்
னுழித்தத்தைச்செய்தன்றிப்போகாவினையையொருநொடியித்
கழித்தத்தையென்சொல்லுகேன்றனக்காட்பட்டகாலத்திலே (௯௰

காலமலைக்கும்புவனங்களைக்கரந்தாயுதிரம்
காலமலைக்குமைத்தாயழகாகமலத்துப்பஞ்சாரீ
காலமலைக்கும்புவிக்குமன்பாவுயிர்காயம்விடுங்
காலமலைக்குங்கடுங்கூற்றைக்காய்ந்தென்னைக்காத்தருளே. (௯௧)

அருளக்கொடியிடைப்பூமாதுநீயும்வந்தாளினுமாம்
இருளக்கொடியநமன்வருங்காலத்திகழினுமாம்
கருளக்கொடியழகாவலங்காரவன்கஞ்சனெஞ்சத்
திருளக்கொடியவுதைத்தாயெனதுயிருன்னுயிரோ. (௯௨)

உயிர்க்கும்படிக்குமுன்னாயிரம்பேரொன்றெறுத்தன்னைமார்
செயிர்க்கும்படிக்குநின்றேனென்செய்கேன்செழுந்தேவர்களும்
அயிர்க்கும்படிக்குறளாமழகாவலங்காரநெய்க்கும்
தயிர்க்கும்படிக்குஞ்செவ்வாய்மலர்ந்தாய்நின்னைத்தாள்பணிந்தே.

பணிபதிவாடநின்றாடினநூற்றுவர்பாற்சென்றன
பணிபதினாலுபுவனமுந்தாயினபாப்பதின்மர்
மணிபதியெங்குமுவந்தனபங்கயப்பாவையுடன்
பணிபதிமார்பனலங்காரன்பொற்றிருப்பாதங்களே. (௯௪)

பாதகர்த்தனைபேருங்கனகனும்பன்னகத்தா
லேதகரத்தனையற்கருளாளியையெட்டெழுத்துள்

ஒத்தகாத்தனைச்சுந்தரத்தோளுடையானைநவ
நீத்தகாத்தனைச்சேர்ந்தார்க்குத்தேவருநேரல்லரே. (௯௫)

அல்லலங்காரையுஞ்சேர்விக்குமைம்புலவாசையென்றும்
பல்லலங்காலநந்துகோளான்றியுட்பற்றறுதுகண்டாய்
மல்லலங்காரிகையார்மருடீர்ந்துவணங்குநெஞ்சே
தொல்லலங்காரனைத்தென்றிருமாலிருஞ்சோலையிலே. (௯௬)

சோலையிலாமயில்சேர்திருமாலிருஞ்சோலைநின்றான்
வேலையிலாமையில்வேடங்கொண்டான்புயமேவப்பெருஞ்
சேலையிலாமையிலக்குகண்ணாளவன்றெய்வத்துழாய்
மாலையிலாமயில்மாலையுற்றாளந்திமாலையிலே. (௯௭)

மாலைக்கரும்புசிறுகால்துகைக்கவருந்துமெங்கள்
ஆலைக்கரும்புதன்னாசையெல்லாஞ்சொல்லிலாயிரந்தோட்
டோலைக்கரும்புண்டொடமடமாமதியூர்குடுமிச்
சோலைக்கரும்புயலேயருளாயுன்றுளவினையே. (௯௮)

துளவிலையார்பொன்னடிமுடிசூட்டித்தொண்டாக்கியென்னை
வளவிலையாக்கொண்டநீகைவிடேன்மங்கலகுணங்கள்
அளவிலையாவலங்காரசமயிகளாய்ந்தவண்ணம்
உளவிலையாயுருவாயருவாயவொருமுதலே. (௯௯)

ஒருபாலமரரொருபான்முனிவருடனிருந்தென்
இருபார்வையுங்கொண்டுவப்பதென்றோவிடபக்கிரிக்கும்
பொருபாற்கடற்குமயோத்திக்கும்பொற்றுவராபதிக்கும்
திருபாலைவைகுந்தமுநீவீற்றிருக்கின்றநீர்மையுமே. (௱)

அலங்காருக்குப்பரமச்சுவாமிக்கழகருக்குங்
கலங்காப்பெருநகரங்காட்டுவார்க்குக்கருத்தன்பினல்
நலங்காதசொற்றொடையந்தாதியைப்பற்பநாபப்பட்டன்
விலங்காதகீர்த்திமணவாளதாசன்விளம்பினனே. (௱௧)

அழகியமணவாளதாசர்திருவடிகளேசரணம்.

அழகரந்தாதி

முற்றும்,